# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(பொறுப்பு)
வள்ளியூர்

2024 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 07–ஆம் நாள், புதன்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2054 சோபகிருது வருடம் தை மாதம் 24–ம் நாள் புதன்கிழமை

இ.ம.எண்.04/2023 இன் அ.வ.எண்.16/2021

மைக்கிள் சோபியா ... மனுதாரர் / பிரதிவாதி

/எதிர்/

மரியம்மாள் ....எதிர்மனுதாரர் /வாதி

இம்மனு 24.01.2024 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ராம்நாத் ஐயர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சுபாஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரரால் இம்மனுவானது பிரிவு 151–ன் கீழ் 07.12.2022 தேதியிட்ட ஒருதலைபட்ச உத்தரவு 24.03.2023 தேதியன்று ரத்தாகிவிட்டது என்ற

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2024.02.07 13:49:21 +0530

விவரத்தை சார்பதிவாளர் வள்ளியூர் அவர்களுக்கு தகுந்த உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. <u>**மனுவின் சுருக்கம்:**</u>

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. எதிர்மனுதாரர்/வாதி வழக்கு தாக்கல் செய்த காலத்தில் மனுதாரர் புதுக்கோட்டை மாவட்டத்தில் வசித்து வந்ததால் வழக்கு குறித்த வழக்கு குறித்த விவரம் மனுதாரருக்கு சார்பு செய்யப்படவில்லை. வழக்கின் வாதிக்கு மனுதாரர் புதுக்கோட்டையில் வசித்து வருவது நன்கு தெரிந்திருந்தும் வேண்டுமென்றே திருநெல்வேலி மாவட்ட பதிப்பகத்தின் மூலம் நாளிதழில் விளம்பரம் செய்ததால் மனுதாரருக்கு அந்த விபரமும் சார்பு செய்யப்படவில்லை. மனுதாரர் விடுமுறைக்கு ஊருக்கு வந்த சமயத்தில் எதிர்மனுதாரர்/வாதி மனுதாரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து ஒருதலைபட்ச தீர்ப்பாணை பெற்றுள்ள விபரம் தெரியவந்தது. மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி இ.ம.எண்.03/2023 தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனு அனுமதிக்கப்பட்ட பின்பு வாதி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைபட்ச உத்தரவை வைத்து சொத்துக்களை வேறு நபருக்கு கிரையம் முடிக்க முயன்று வருகிறார். 07.12.2022 தேதிக்குப்பின் நீதிமன்றம் மூலமாக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மேற்படி உத்தரவு சார்பு செய்யப்பட்டுள்ளது. அது மனுதாரர்

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2024.02.07 13:49:30 +0530

பெயருக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் ஒருதலைபட்ச உத்தரவு அடிப்படையில் செல்லாது என பதிவு செய்யப்பட்டுள்ளதால் வாதி ரத்து உத்தரவை மறைத்து புதிதாக ஆவணம் ஏற்படுத்த முயன்று வருகிறார். எனவே, 07.12.2022 தேதியிட்ட ஒருதலைபட்ச உத்தரவு 24.03.2023 தேதியன்று ரத்தாகிவிட்டது என்ற விவரத்தை சார்பதிவாளர் வள்ளியூர் அவர்களுக்கு தகுந்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்சாற்றுரை மெமோவின் சுருக்கம்:</u>

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. உண்மையில், இந்த எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் நீதிமன்றம் பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவின்படி மனுதாரர்/பிரதிவாதி போலியாக புனைந்துள்ள 15.10.2013 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யப்பட்டதை தொடர்ந்து எதிர்மனுதாரர்/வாதியானவர் கடந்த 17.04.2023 அன்று தனது மகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார். அதன் ஆவண எண்.1292/2023 ஆகும். எனவே, இம்மனுவினை அனுமதித்தால் ஒரே சொத்திற்கு இரண்டு பத்திரபதிவுகள் ஏற்படும் சூழ்நிலை உருவாகும். இதனால் முழு விசாரணைக்கு பின்னரே யாருடைய ஆவணம் உண்மையானது என தீர்வு காண்பது சாலச்சிறந்தது ஆகும். எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2024.02.07 13:49:40 +0530

**<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>**

3. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக 07.12.2022 ல் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி இ.ம.எண்.03/2023 தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, 07.12.2022 தேதியிட்ட ஒருதலைபட்ச உத்தரவு 24.03.2023 தேதியன்று ரத்தாகிவிட்டது. வாதி ரத்து உத்தரவை மறைத்து புதிதாக ஆவணம் ஏற்படுத்த முயன்று வருகிறார் என கூறியுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில், நீதிமன்றம் பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவின்படி மனுதாரர்/பிரதிவாதி போலியாக புனைந்துள்ள 15.10.2013 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யப்பட்டதை தொடர்ந்து எதிர்மனுதாரர்/வாதியானவர் கடந்த 17.04.2023 அன்று தனது மகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என கூறியுள்ளார்.

எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்ச உத்தரவின் பேரில் 17.04.2023 ல் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், ஒருதலைபட்ச உத்தரவு இந்நீதிமன்றத்தால் ரத்தும் செய்யப்பட்டுவிட்டது. ஏற்கனவே இந்நீதிமன்றம் ஒருதலைபட்ச உத்தரவின் பேரில் வள்ளியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 15.10.2013 ல் பதிவு செய்யப்பட்ட

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2024.02.07 13:49:48 +0530

செட்டில்மெண்ட் ஆவணம் எண்.3415/2013 செல்லாது என உத்தரவு வழங்கி வள்ளியூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அறிவிப்பும் அனுப்பியுள்ளது. ஒருதலைபட்ச உத்தரவு நீக்கரவு செய்யப்பட்டதால், ஒருதலைபட்ச உத்தரவின் அடிப்படையில் ரத்து செய்யப்பட்டதாக கூறப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எண்.3415/2013 செல்லாது என இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. ஒருதலைபட்ச உத்தரவின் அடிப்படையில் 15.10.2013 தேதியில் ரத்து செய்யப்பட்டதாக கூறப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எண்.3415/2013 செல்லாது என உத்தரவு அளிக்கப்படுகிறது. இவ்உத்தரவை வள்ளியூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறும் உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024ம் வருடம் பிப்ரவரி மாதம் 07-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2024.02.07 13:49:58 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(பொறுப்பு)
வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2024.02.07 13:50:05 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(பொறுப்பு)
வள்ளியூர்.

மு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.04/2023 இன்

அ.வ.எண்.16/2021

தேதி.07.02.2024